செ.வெ.எண்: 47/ஜூன் நாள்: 20.06.2016

# இராமநாதபுரம் மாவட்டம்

## மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மொத்தம் ரூ.4.35 இலட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை

## மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பயனாளிகளுக்கு வழங்கினார்.

இராமநாதபுரம் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் இன்று (20.06.2016) நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களைப் பெற்று, மாற்றுத்திறனாளிகள் நலத்துறை , ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக மொத்தம் ரூ.4.35 இலட்சம் மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை பயனாளிகளுக்கு வழங்கினார்.

மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பாக 2014-2015-ஆம் நிதியாண்டு 10-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடத்தைப் பெற்ற பார்வையற்ற மாணவி செல்வி.எம்.மோனிஷாவிற்கு உயர்கல்வி பயில ஊக்கத் தொகை வழங்கும் திட்டத்தின் கீழ் ரூ.30,500/-க்கான காசோலையினையும், 12-ஆம் வகுப்பு அரசு பொதுத் தேர்வில் மாவட்ட அளவில் முதலிடத்தைப் பெற்ற காது கேளாத மற்றும் வாய் பேச இயலாத மாணவி செல்வி.வினிதாதேவிக்கு ரொக்கப்பரிசு மற்றும் பாடப்புத்தகம் வழங்கும் திட்டத்தின் கீழ் பரிசுத் தொகையாக ரூ.15,000/-க்கான காசோலையினையும், ஆதிதிராவிடர் மற்றும் பழங்குடியினர் நலத்துறையின் சார்பாக வன்கொடுமை தடுப்புச் சட்டத்தின் கீழ் பாதிக்கப்பட்ட 4 நபர்களுக்கு தலா ரூ.93,750/- வீதம் மொத்தம் ரூ.3,75,000/-க்கான காசோலைகளையும், 1 பயனாளிக்கு ரூ.15,000/-க்கான காசோலையினையும், ஆக மொத்தம் ரூ.4.35 இலட்சத்திற்கான காசோலைகளை மாவட்ட ஆட்சித் தலைவர் முனைவர்.ச.நடராஜன்,இ.ஆ.ப., அவர்கள் வழங்கினார்.

மேலும் இக்கூட்டத்தில் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் இருந்து பொதுமக்கள் ஏராளமானோர் கலந்து கொண்டு பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களிடம் வழங்கினார்கள். அவற்றில் தனிநபர் மனுக்களான திருமண நிதியுதவித் திட்டம், முதியோர் உதவித்தொகை, பட்டா மாறுதல் உள்ளிட்ட மனுக்களும், பொதுநல மனுக்களான சாலைவசதி, போக்குவரத்துவசதி, பள்ளி வசதி , குடிநீர் வசதி உள்ளிட்டவை வேண்டி மனுக்களும் வரப்பெற்றது. கோரிக்கை மனுக்களைப் பெற்றுக் கொண்ட மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் அம்மனுக்களை ஆய்வு செய்து தீர்வு காண விரைந்து நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களுக்கு அறிவுரை வழங்கினார்.

இக்கூட்டத்தில் மாவட்ட வருவாய் அலுவலர் திரு.எம்.அலி அக்பர், சமூக பாதுகாப்புத் திட்ட தனித்துணை ஆட்சியர் திருமதி.எம்.முருகசெல்வி, மாவட்ட ஆதிதிராவிடர் நல அலுவலர் திரு.சீ.மகேஸ்வரன், மாற்றுத்திறனாளி நல அலுவலர் திரு.சி.தங்கவேல் உள்பட அரசு அலுவலர்கள், பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.

**வெளியீடு: செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், இராமநாதபுரம்**